2022 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இணையதளத்தில்* application *வந்திருக்கிறதா என்று பார்த்து அந்த* application *வந்திருந்தால், எந்த* date*–ல் அது வந்திருக்கிறது என்று சொன்னீர்கள் என்றால், நிச்சயமாக அதைச் செய்து தருவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 98, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

98—

துணை மின் நிலையம்

***3115—திரு. ஓ.எஸ். மணியன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் தொகுதி, தலைஞாயிறு பேரூராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வேதாரண்யம் தொகுதி, தலைஞாயிறு பேரூராட்சியில் புதிய துணை மின் நிலையம் அமைக்க நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன், அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள்.*

திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் தொகுதியில் தலைஞாயிறு பேரூராட்சி கடைக்கோடியில் உள்ள ஊர் ஆகும். புயல் அடித்தால், கடுமையான காற்று வீசினால், மழை பெய்தால் மின்தடை ஏற்பட்டு விடுகிறது. அதனைச் சரி செய்ய நீண்ட நேரம் ஆகிறது. எனவே, இப்பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வாக 33/11 கிலோவாட் துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டுகிறேன். தகுந்த அரசு நிலம் இல்லாததால் இதற்குத் தேவையான இரண்டு ஏக்கர் பட்டா நிலம் அரசு வழிகாட்டி மதிப்பிற்குத் தர சம்மதம் பெற்றுத் தந்துள்ளேன். காலதாமதம் இல்லாமல் பத்திரப் பதிவு செய்ய மின் வாரியம் முன்வர வேண்டும். எனவே, இப்பணியை முடித்து தலைஞாயிறு பேரூராட்சியில் 33/11 கிலோவாட் துணை மின் நிலையத்தை அமைத்துத் தர மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் சீரான மின் விநியோகம் செய்வதற்காக கடந்த ஆண்டு 216 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான உத்தரவுகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கி 193 துணை மின் நிலையங்களுக்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டு அதற்கான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகின்றது. மீதம் இருக்கக்கூடிய 23 துணை மின் நிலையங்களுக்கான இடங்கள் கண்டறியப்பட்டு வருகின்றன. அதேபோல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற தலைஞாயிறு பேரூராட்சியில் இந்த ஆண்டே துணை மின் நிலையம் அமைப்பதற்கான நிலம் கையகப்படுத்தப்பட்டு, திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, அதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2022 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள்.*

திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டே செய்து தரப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தங்கள் வாயிலாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி அவர்கள்.*

திருமதி ஆ. தமிழரசி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியத்தில் 22 கே.வி. துணை மின் நிலையத்திலிருந்து 60 கிராமங்களுக்கு மின்சாரம் செல்கின்றது. அதிக மின்னழுத்தம் காரணமாக அங்கே அடிக்கடி மின்தடை ஏற்படுகிறது. அரசின் சார்பாக நல்லாண்டிபுரத்தில் ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கு வருவாய்த் துறையின்மூலம் ஒப்புதல் பெறப்பட்டு, இடம் தேர்வு செய்யப்பட்டு, கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. எனவே, நல்லாண்டிபுரத்தில் துணை மின் நிலையத்தை விரைந்து அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–30

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான இடங்களைத் தேர்வு செய்கின்றபோது, முதலில் அரசு நிலங்கள் இருக்கின்றனவா என்பதை ஆய்வு செய்து, அந்த அரசு நிலங்களை எந்தவிதமான வருவாய் இழப்பும் ஏற்படாமல் பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவுகளை வழங்கியிருக்கின்றார்கள். சில பகுதிகளில் அரசு நிலம் இல்லை என்ற நிலை வருகின்றபோது, அடுத்தகட்டமாக தனியார் நிலங்களைப் பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அவரது சட்டமன்றத் தொகுதியில் மாண்புமிகு*

உறுப்பினர் சுட்டிக்காட்டியிருக்கின்ற துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணியை விரைவாக மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜோசப் சாமுவேல் அவர்கள்.

திரு. ஜோசப் சாமுவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அம்பத்தூர், ஒரகடம், புதூர் மற்றும் மேனாம்பேடு ஆகிய பகுதிகளில் சுமார் 87,000 மின் நுகர்வோர்களில், 80 சதவிகிதம் வீட்டு மின் நுகர்வோர்களாகவும், 10 சதவிகிதம் தொழிற்சாலை நுகர்வோர்களாகவும், 10 சதவிகிதம் வணிக நுகர்வோர்களாகவும் உள்ளனர். இதில் பயன்பெறும் பொது மக்களுக்கு வசதியாக, அம்பத்தூர், ஒரகடம் பகுதிகளில் சீரான மின்சாரம் வழங்க ஒரு புதிய 110 கே.வி. துணை மின் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் புதிய துணை மின் நிலையங்களுக்கான கோரிக்கைகள் வரப்பெற்றதன் அடிப்படையிலும், துறை வாரியாக தமிழகம் முழுவதும் ஆய்வுகள் செய்யப்பட்டதன் அடிப்படையிலும், 216 துணை மின் நிலையங்களுக்கான பணிகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி தொடங்க அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு சீரான மின் விநியோகம் செய்வதற்காக, எந்தெந்தப் பகுதிகளில் துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும் என்பது குறித்து துறை வாரியாக ஆய்வுகளும் செய்யப்பட்டு வருகின்றன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டிய அந்தப் பகுதியிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2022 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* JMH. *அசன் மௌலானா அவர்கள்.*

திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளச்சேரியில் சுமார் 60,000 மின் இணைப்புகள் உள்ளன. அப்பகுதி ஏற்கெனவே கடுமையான* low voltage–*ஐ சந்தித்து வருகிறது. தற்போது அங்கு 250* transformers*தான் இருக்கின்றன. அங்கிருக்கக்கூடிய* TANGEDCO *அதிகாரிகளிடம் பேசியபோது, அவர்கள் 500* transformers *இருந்தால்தான் சீரான மின்சாரம் விநியோகிக்க முடியும் என்று தெரிவித்தனர்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், 500* KV transformer.

திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது 250* transformers *இருக்கின்றன. 500* transformers *இருந்தால்தான் சீரான மின்சாரம் விநியோகம் செய்ய முடியும் என்று தெரிவித்தனர். அதேபோல், வேளச்சேரியில் ஒரு* sub–station *வேண்டுமென்று ஏற்கெனவே கேட்டிருந்தோம். இதுவரை அமைக்கப்படவில்லை. அதற்கான இடமும் தீர்மானிக்கப்பட்டு, வழங்கப்பட்டுள்ளது. ஆனால், வேளச்சேரியில்* sub–station *வரவில்லை. வேளச்சேரி என்பது, வெகு வேகமாக வளர்ந்து வரும் ஒரு சட்டமன்றத் தொகுதி. எனவே, எங்களுக்கு ஒரு* sub–station *அமைத்துத்தர வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையைப் பொறுத்தமட்டும், 12 இடங்களில் துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான உத்தரவுகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற வேளச்சேரி பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் இந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. வரக்கூடிய காலங்களில் அந்தத் துணை மின் நிலையம் அமையப்பெற்ற பிறகு, சீரான மின் விநியோகம், மிகச் சிறப்பாக இருக்கும் என்பதை மாண்புமிகு*

பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. K. ராதாகிருஷ்ணன் அவர்கள்.

திரு. K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலை நகரத்தில், தாராபுரம் ரோட்டிற்கும், திருப்பூர் ரோட்டிற்கும் இடையிலே ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு இணைப்புச் சாலை உள்ளது. அதில் மின்சார வாரியச் செயற்பொறியாளர் அலுவலகத்திற்குப் பின்புறம் மட்டும் ஒரு வழிச் சாலையாக இருக்கின்ற காரணத்தினாலே, கனரக வாகனங்கள் செல்வதற்குச் சிரமமாக இருக்கின்றது. ஆகவே, மின்சார வாரியச் செயற்பொறியாளர் அலுவலகத்திற்குப் பின்புறம் உள்ள சாலையை 400 அடி நீளம், 20 அடி அகலம் என்ற அளவில் செய்து கொடுக்க வேண்டும் என்று நாங்கள் ஏற்கெனவே மின்சார வாரியத்திற்கு கடிதம் கொடுத்திருக்கிறோம். மின்சார வாரியம் இதற்கு நகராட்சி ரூ.50 இலட்சம் கட்ட வேண்டும் என்று சொல்கிறார்கள். நகராட்சியினுடைய நிதிநிலைமை சரியில்லாத காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 50 இலட்ச ரூபாய் கட்டுவதிலிருந்து விலக்கு அளித்து, அந்த நிலத்தைக் கொடுத்தால், மக்களுக்கும், வாகன ஓட்டிகளுக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு துறையிலிருந்து இன்னொரு துறைக்கு நிலத்தை மாற்றுகின்றபோது, அந்த நிலத்தினுடைய வழிகாட்டி மதிப்புகளைக் கொண்டு அந்த நிலத்தை வகை மாற்றம் செய்வது இதுவரை நடைமுறையாக இருந்து வருகிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியிருக்கின்ற இடம் துறை வாரியாக ஆய்வு செய்யப்பட்டு, அதன் பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2022 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. தளபதி அவர்கள்.*

திரு. கோ. தளபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், கள்ளிக்குடி வட்டம், மைக்குடி ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு சென்னை தலைமை அலுவலகத்தில் முன்மொழிவு இருக்கிறது. விரைவாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே துணை மின் நிலையம் அமைக்க முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் மட்டும் 14 இடங்களில் துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, திட்ட மதிப்பீடுகள் தயார் நிலையில் இருக்கின்றன.* Tender *விடுவதற்கான பணிகள் நிறைவுபெற்ற பிறகு, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற அந்தப் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. பிரபாகரன் அவர்கள்.*

திரு. ம. பிரபாகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார நிருவாகச் சீர்திருத்தத்திற்காக பெரம்பலூர், மின்வட்ட அலுவலகத்தை திருச்சியிலிருந்து விழுப்புரத்திற்கு மாற்றுவதாக அறிவிப்பு வந்திருக்கிறது. அது, விவசாயிகள், மின் நுகர்வோர் மற்றும் பொது மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது. விழுப்புரத்திற்குச் செல்ல வேண்டுமானால், கிட்டத்தட்ட 1½ மணி நேரம் கடந்து செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, அந்த வட்ட அலுவலகத்தை மீண்டும் திருச்சிக்கே மாற்றித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், திருச்சி மின் பகிர்மான வட்டத்தில்தான் தொடர்ந்து செயல்படும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அந்த அச்சம் தேவையில்லை. திருச்சிக்கு மிக அருகில் இருக்கக்கூடிய மற்ற பகுதிகளையும் ஒருங்கிணைத்து மூன்று புதிய மண்டலங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு உருவாக்கித் தந்திருக்கின்றார்கள். அதனடிப்படையில், அதிக அல்லது குறைந்த எண்ணிக்கையிலிருக்கின்ற மின் இணைப்புகளைச் சரி செய்து புதிய வட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. ஆனால், பெரம்பலூரைப் பொறுத்தவரை, திருச்சி மண்டல அலுவலகத்தில்தான் தொடர்ந்து செயல்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 99, மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கே. கலைவாணன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

99—

ஆரம்ப சுகாதார நிலையம்

***10235—திரு. பூண்டி கே. கலைவாணன்:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் தொகுதி, திருவாரூர் ஒன்றியம், புலிவலம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,